**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி, B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ.)

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் புதன் கிழமை

**முன்னுரை பதிவேட்டு வழக்கு எண். 06/2026**

------------

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்,

திருநீலக்குடி காவல் நிலையம்,

குற்ற எண். 787/2021. ...குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. ஜெயகுமார், வயது 36/2021,

த/பெ. கலியன்,

கச்சேரித்தெரு, போலிஸ் காலணி பின்புறம்,

திருவிடைமருதூர் தாலுக்கா.

**2. ஹரிஹரன், வயது 21/202, (இறப்பு)**

**த/பெ. சுபாஷ்,**

**சாரகுளம், வடகரை, திருவிடைமருதூர் தாலுக்கா.**

3. அருண், வயது 24/2021

த/பெ. முருகன்

விஸ்வநாதபுரம். ....எதிரிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 10/02/2025 அன்று முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.06/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில், கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்களும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.J.மணிகண்டன்**,B.Com.,B.L., அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனைக்குப் பின்னர், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பிறப்பிக்கப்படும்....

<u>உத்தரவு</u>

கடந்த 26/11/2021ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு இவ்வழக்கில் திருவிடைமருதூர், போலிஸ் காலணி பின்புறம், கச்சேரித் தெருவில் உள்ள பட்டியல் சாட்சி-1 பாபு என்பவருக்கும், 1வது எதிரி ஜெயகுமாரின் அண்ணன் செல்வக்குமார் கொலை வழக்கில் நேரடி சாட்சியாக இருந்த பட்டியல் சாட்சி-1 பாபு, நீதிமன்ற விசாரணையில் சரியாக சாட்சி சொல்லவில்லை என பட்டியல் சாட்சி-1 மீது, 1வது எதிரி விரோதத்துடன் இருந்து வந்தும், அதனால் சரியான நேரம் பார்த்து காத்திருந்த 1வது எதிரி ஜெயக்குமாரும், அவருடன் 2 வது எதிரி ஹரிஹரன் மற்றும் 3 வது எதிரி அருண் ஆகியோர்களுடன் சேர்ந்து டாடா ஏஸ் வாகனத்தால் மோதி சொற்ப காயம் ஏற்படுத்தியும், தப்பியோடிய பட்டியல் சாட்சி-1 ஐ எதிரிகள் மூவரும் இன்னைக்கு தப்பிச்சிட்ட என்னைக்கு இருந்தாலும் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவு 307 இதசவின் கீழ் திருநீலக்குடி காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், அரசு தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், பிரிவு 230 BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரிகள் பிரிவு 307 இதசவின் கீழான குற்றம், மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க வழக்கு என்பதால், இவ்வழக்கை உரிய விசாரணைக்காக மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பிரிவு 232 (அ) BNSS-ன் கீழ் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கில் 1வது எதிரி 23/12/2021ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, தஞ்சாவூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் குற்றவியல் பல்வகை மனு எண்.82/2022, 06/01/2022-ம் தேதியிட்ட உத்தரவின் படி 1வது எதிரி 10/01/2022 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். வழக்கு முடிவடையும் வரையிலும் எதிரிகள் தொடர்ந்து பிணையில் இருந்து வர பிரிவு 232(ஆ)BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

**2) 2வது எதிரி ஹரிஹரன் என்பவர் ரயில்வே தண்டவாளத்தில் அடிப்பட்டு 31/07/2023 ம் தேதியன்று இறந்துவிட்டதால். 2வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது. (2வது எதிரிக்கான கும்பகோணம் இருப்புபாதை காவல் நிலையத்தின் முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் சான்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)**

3) 3வது எதிரியை கைது செய்யவில்லை. இந்நீதிமன்ற அழைப்பாணையின் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

5) வழக்கு கோப்பு மற்றும் வழக்குச் சொத்துகளை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் தஞ்சாவூரில் சமர்ப்பிக்க பிரிவு 232(இ)BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

6) அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு இவ்வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டதென்று பிரிவு 232(ஈ) BNSS-ன் கீழ் தகவல் தெரிவிக்க உத்தரவிடப்பட்டது.

7) எதிரிகள் வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டு என்று கூறியுள்ளனர்.

8) எதிரிகள் 17/04/2026 தேதியன்று மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

சுருக்கெழுத்து தட்டச்சரிடம் என்னால் சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ம் நாள் புதன் கிழமை அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஒப்பம் (P. ரெங்கேஸ்வரி,)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)